**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம், இராமநாதபுரம்**
**(கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்)**

**முன்னிலை: திரு. C. மோகன்ராம், M.A., B.L.,**
**விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாய நீதிபதி/**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**M.C.O.P. No.73/2022**
**(CNR No.TNRM 01 001512 2022)**

1. ராமநாதன், வயது சுமார் 59, த/பெ.லெட்சுமணன், சிங்கனேந்தல் கிராமம், மாதவனூர் அஞ்சல், தேவிப்பட்டிணம் வழி, இராமநாதபுரம் வட்டம் மற்றும் மாவட்டம்.

... மனுதாரர்

/எதிர்/

1. Metron, S/o.Dharmar, Door No.5/114, R.C. Street, Devipattinam, Ramanathapuram Taluk and District.

2. Manager, Chola MS General Insurance Co. Ltd, Regional office, No.3, 4 Dindugul Highway Road, 1st floor, Madurai.

3. The Manager, The Oriental Insurance Company Ltd., TP Claims, Ramalinga Radiance, 2nd Floor, Door No.78, TPK Road, Andalpuram, Madurai.
(Amended as per order in I.A.285/2025 dated 23.10.2025)

... எதிர்மனுதாரர்கள்

மனு தாக்கலான நாள் – 18.04.2022

மனு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் – 22.04.2022

இம்மனு 24.02.2026 அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்மையால்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:16:20 +0530

ஒருதலைப்பட்சமாக கருதப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.தர்மராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.வடிவேலு அவர்கள் முன்னிலையாகியும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரை பரிசீலனையில் இருந்தும், இன்று இத்தீர்ப்பாயம் வழங்கும்...

**உத்தரவு**

20.12.2021ம் தேதி மாலை 04.30 மணியளவில் ஏற்பட்ட சாலை விபத்தில் தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக மனுதாரர் ரூ.20,00,000/- இழப்பீடு கோரி இம்மனு மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை சட்டம் 1988 பிரிவு 140, 142 மற்றும் 166 உ/இ விதி 3(1) திருத்தப்பட்ட சட்டம் 54/1994ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**:

மனுதாரர் கடந்த 20.12.2021ம் தேதி மாலை 04.30 மணியளவில் அவரது TN 65 AF 1810 இருசக்கர வாகனத்தில் சாமான்கள் வாங்கிக்கொண்டு தலைக்கவசம் அணிந்து தேவிப்பட்டிணத்திலிருந்து கழனிக்குடிக்கு ரோட்டின் இடதுபுறத்தில் மெதுவாக வந்து கொண்டிருந்தபோது கழனிக்குடி ரோட்டில் உள்ள பூவோடை பாலம் அருகில் எதிரே 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN 65 AK 3943 என்ற Bajaj Pulsar மோட்டார் சைக்கிளில் ஓட்டி வந்த மெக்டோனி என்பவர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து ரோட்டின் வலதுபுறம் ஏறி, மனுதாரர் மீதும் அவரது இருசக்கர வாகனத்தின் மீதும் மோதி விட்டார். அதனால் மனுதாரருக்கு வலது கை 3வது விரல் எலும்பு முறிந்து துண்டாகிவிட்டது. வலது மேல்தாடை எலும்பு முறிவு ஏற்பட்டது. வலதுகண் புருவத்தில் கீழ் பகுதிகளில் வெட்டுக் காயங்களும், வலதுகை முழுவதும் மற்றும் வலதுபக்க முகத்தில்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:16:28 +0530

ரத்தக்காயங்களும் ஏற்பட்டுள்ளது. மேற்படி சம்பவத்தை பார்த்த மனுதாரர் ஊரைச் சேர்ந்த கோவிந்தராஜ் மற்றும் செல்வராஜ் ஆகியோர்கள் ஓடி வந்து மனுதாரரை தூக்கி 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு 20.12.2021 முதல் 21.12.2021 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று பின்னர் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் 21.12.2021 முதல் 27.12.2021 வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். மனுதாரருக்கு மேல்தாடையில் அறுவை சிகிச்சை செய்து பிளேட் பொருத்தப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்படி மருத்துவமனையில் தொடர்ந்து வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார்.

மனுதாரருக்கு விபத்தின்போது 59 வயது. மனுதாரர் நீதித்துறையில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறார். விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் மனுதாரரால் முன்புபோல் எந்த பொருட்களையும் கடித்து சாப்பிட முடியவில்லை, முன்புபோல் பேச முடியவில்லை, தலையை அசைக்க முடியவில்லை, மேல்தாடையில் வலி இருந்துகொண்டே இருக்கிறது. தலைவலியும், தலைச்சுற்றலும் இருந்து கொண்டே இருக்கிறது, வலது கை 3 வது விரலில் எலும்பு துண்டாகிவிட்டதால் குட்டையாக உள்ளது. அதனால், வலது கையை பயன்படுத்தி எந்தவேலையும் செய்யமுடியவில்லை. முன்புபோல் பணிக்கு செல்லமுடியவில்லை. இருசக்கர வாகனம் ஓட்டமுடியவில்லை. விபத்து சம்பந்தமாக தேவிபட்டிணம் போலீசார் 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரான மெட்டோனி மீது வழக்கு பதிவு செய்து குற்ற எண்.361/2021 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச–ன் கீழ் பதிவு செய்து, விபத்திற்கு 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் காரணம் என்பதால் உரிமையாளர் என்ற முறையில் 1 ம் எதிர்மனுதாரரும், 1 ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2. 3 எதிர்மனுதாரர்களின் காப்பீடு நிறுவனங்களில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் மனுவில்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:16:32 +0530

கோரியுள்ள ரூ.20,00,000/- இழப்பீட்டுத் தொகையை மனு தாக்கல் செய்த தேதியில் இருந்து தொகை செலுத்தும் தேதி வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடனும், மனுதாரர் செலவுத் தொகையுடனும் இழப்பீடு கொடுக்க இம்மனு தாக்கல்.

3) <u>1ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம் :</u>

மனுவில் மனுதாரர் கூறியுள்ள விவரங்கள் இந்த எதிர்மனுதாரரால் ஒத்துக்கொள்ளப்படும் விவரங்களை தவிர மற்ற விவரங்களை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். கடந்த 20.12.2021ம் தேதி மாலை 4.30 மணியளவில் மனுதாரர் தனக்கு சொந்தமான TN 65 AF 1810 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், மதுபோதையில் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் அங்கும் இங்குமாக ரோட்டை அலசிக்கொண்டு எதிரே வந்த 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் மோதி கீழே விழுந்து காயங்கள் ஏற்பட்டது. மேற்படி 1ம் எதிமனுதாரருக்கும் கொடுங்காயங்கள் ஏற்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் விபத்து குறித்து தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்தப் புகாரினைப் பெற்றுக்கொண்டு போலீசார் அவரது புகாரை மறைத்துவிட்டு, மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்துள்ளார்கள்.

மேலும் மனுதாரர் மனுவில் கோரியுள்ள வயது, காயங்களின் தன்மை, சிகிச்சை பெற்ற விவரம் மற்றும் மருத்துவத்திற்காக செலவிட்ட தொகை மற்றும் அதனால் அவருக்கு ஏற்பட்ட பாதிப்பு ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர். 1ம் மனுதாரர் தன்னுடைய வாகனத்தை 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளார். எனவே, 1ம் எதிர்மனுதாரருக்காக 2ம் எதிர்மனுதார் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் என்றும் 1ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் அல்ல என்றும் எனவே 1ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தாக்கல்.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:16:38 +0530

4) **<u>2ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுவில் குறிப்பிட்டு ஒத்துக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற அனைத்து விவரங்களையும் மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர். இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. இம்மனு தள்ளுபடிக்குரியது. மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறிப்பிட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதை தவிர இதர சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்.

1ம் எதிர்மனுதாரருக்கு உரிமையான TN 65 AK 3943 என்ற இருசக்கர வாகனமானது 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், மனுதாரர் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டும்போது செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தார் என்பதையும் தகுந்த ஆவணங்கள் மூலம் நிரூபிக்கக் கடமைப்பட்டவர். மனுதாரர் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டபோது, தயாரிக்கப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கையில் மனுதாரர் குற்ற எண் குறிப்பிட்டுள்ளதாலும், மனுதாரர் தலைகவசம் அணியாமல் வாகனத்தை ஓட்டிச் சென்றதாலும், இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் பெறப்படவில்லை என்பதாலும், 1ம் எதிர்மனுதாரர் காப்பீடு விதிமுறைகளை மீறியுள்ளதாலும், 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் அல்ல. மனுதாரரே விபத்திற்கு காரணம் என்பதால் மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ளவாறு இழப்பீடு பெறத்தக்கவர் அல்ல.

மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள வயது, தொழில், மாத வருமானம் மற்றும் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள், அதனால் ஏற்பட்ட பாதிப்பு ஆகியவற்றை நிரூபிக்கக் கடமைப்பட்டவர். மனுதாரர் தனது மனுவில் பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகப்படியான இழப்பீடுகள் கோரியுள்ளார். 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தாக்கல்.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:16:43 +0530

5) **3ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம் :**

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகிறது. மனுதாரரே மனுவில் உள்ள சங்கதிகளை நிரூபிக்கக் கடமைப்பட்டவர். மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையினால் விபத்து நடந்துள்ளது. மனுதாரரே விபத்திற்கு காரணம் என்பதால் அவர் இழப்பீடு கோர முடியாது. TN 65 AK 3943 பஜாஜ் பல்சர் என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை. காப்பீடு விதிமீறல் உள்ளதாலும், மனுதாரர் TN 65 AF 1810 என்ற இருசக்கர வாகனத்தில் காப்பீடு நிறுவனத்தை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்பதாலும், மனு தள்ளுபடிக்குரியது. 3ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தாக்கல்.

6) மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு 19 ஆவணங்களை தாக்கல் செய்து ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.19 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.1 முதல் எ.ம.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 சான்றாவணங்களும், சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.4 சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7) **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதைதான் காரணம் என்பது உண்மையா?

2. மனுதாரர் இழப்பீடு பெற உரியவரா, உரியவராயின் இழப்பீடு யாரால் செலுத்தப்பட வேண்டும்?

3. இழப்பீடு எவ்வளவு?

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:16:48 +0530

8) **<u>பிரச்சனை 1–க்குரிய தீர்வு :</u>**

மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மெய்ப்பிக்கும் விதமாக தன்னை ம.சா.1 ஆக விசாரித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில் மனுவில் கூறியுள்ளதுபோல், "கடந்த 20.12.2021ம் தேதி மாலை 04.30 மணியளவில் தேவிபட்டிணத்திலிருந்து தனது ஊருக்கு TN 65 AF 1810 என்ற இருசக்கர வாகனத்தில் கழனிக்குடி செல்லும் ரோட்டில் இடதுபுறம் பூவோடை பாலம் அருகில் தனது இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தபோது TN 65 AK 3943 என்ற 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான பஜாஜ் பல்சர் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த மெக்டோனி என்பவர் அதிவேகமாகவும், கவனக் குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ரோட்டின் வலதுபுறம் ஓட்டி வந்து தான் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் தனக்கு வலது கை 3 வது விரல் எலும்பு முறிந்து துண்டாகி விட்டது என்றும், வலதுமேல்தாடை எலும்பு முறிந்துவிட்டது, வலது கண்புருவத்தில் கீழ் மேல்பகுதிகளில் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டது என்றும், வலது கை முழுவதும் ரத்தக்காயமும், வலது பக்க முகத்தில் ரத்தக்காயங்களும் ஏற்பட்டது என்றும், விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த மெக்டோனியின் கவனக்குறைவே காரணம்" என சாட்சியம் அளித்துள்ளார்.

9) மேலும், விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என முதல் தகவல் அறிக்கையின் நகலை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளார். விபத்து சமயத்தில் வழக்கை புலன் விசாரணை மேற்கொண்ட தேவிபட்டிணம் போலீசார் விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் கவனக்குறைவு காரணம் என குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என குற்ற இறுதி அறிக்கையின் நகலை ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்துள்ளார். ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.6 ஐ பரிசீலிக்கையில் 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை ஓட்டி

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:16:54 +0530

வந்த ஓட்டுநரின் மீது முதல் தகவல் அறிக்கையும், குற்ற இறுதி அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தீர்ப்பாயம் அறிய முடிகிறது.

10) அவ்வாறான சூழ்நிலையில், விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி வந்தவரின் கவனக்குறைவு காரணம் அல்ல என்பதை எதிர்மனுதாரர்களே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள். 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்திற்கு காரணம் மனுதாரர் இருசக்கர வாகனத்தினை அதிவேகமாகவும், கவனக் குறைவாகவும் ஓட்டி வந்ததால் விபத்து ஏற்பட்டுள்ளது என எதிருரையில் கூறியுள்ளதை உறுதிப்படுத்தும்விதமாக மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்கையில் விபத்திற்கு மனுதாரர் காரணம் என்றும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய நபர் காரணம் அல்ல என்பதை உறுதிப்படுத்தும்விதமாக மனுதாரரிடமிருந்து எவ்வித பதில்களையும் பெறவில்லை. விபத்திற்கு மனுதாரர்தான் காரணம் என்ற கேள்வியை கூட முன் வைக்கவில்லை. எனவே, முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையில் விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த ஓட்டுநர்தான் காரணம் என சொல்லப்பட்டுள்ள நிலையில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி வந்த நபர் காரணம் அல்ல என்பதையும் மனுதாரரே காரணம் என்பதையும் எதிர்மனுதாரர்களே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள். எதிர்மனுதாரர்கள் நிரூபிக்காததால், விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநரின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும்தான் காரணம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து பிரச்சனை 1க்குரிய தீர்வு காண்கிறது.

11) <u>பிரச்சனை 2-க்குரிய தீர்வு :</u>

பிரச்சனை 1க்குரிய தீர்வில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி வந்தவரின் கவனக்குறைவினால்தான் விபத்து ஏற்பட்டுள்ளது என

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:16:59 +0530

இத்தீர்ப்பாயம் முடிவு செய்துள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டி வந்த மெக்டோனி என்பவருக்கு விபத்து சமயத்தில் செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அதை மெய்ப்பிக்கும்விதமாக இராமநாதபுரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் கணக்கராக பணிபுரியும் திருமதி.யமுனா என்பவரை எ.ம.சா.1 ஆக விசாரித்துள்ளனர். எம.சா.1ன் சாட்சியத்திலிருந்து 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஆஜர்படுத்தப்படவில்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரருக்குரிய வாகனம் தடுத்து வைக்கப்பட்டு காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது என சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி காப்பீடு நிறுவனத்தின் உதவி மேலாளர் முத்துக்குமார் எ.ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் 1ம் எதிர்மனுதாரர், வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியதால் அது காப்பீடு விதிகளுக்கு முரண்பாடானது என்றும், எனவே மனுதாரருக்கு இழப்பீடு கோர 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் காப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், குறுக்கு விசாரணையில் காப்பீட்டின்படி 3ம் தரப்பினர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டது என்றால், நிபந்தனைக்குட்பட்டு கடமைப்பட்டது என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார். 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதை உறுதிப்படுத்தும்விதமாக 1ம் எதிர்மனுதாரருக்கு அவரது வாகனத்தை ஓட்டிய நபரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்ய சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளது. அதனை பெற்றுக்கொண்ட 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பிக்கவில்லை என்பதால், 1ம் எதிர்மனுதாரர் தன்னுடைய வாகனத்தை ஓட்டுநர் உரிமம் பெறாத நபருக்கு ஓட்ட அனுமதித்துள்ளார் என்பதால், அவர் காப்பீடு விதிகளை மீறியுள்ளார் என்பது 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. காப்பீட்டின்படி 3ம் தரப்பினருக்கு 3ம்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:17:05 +0530

எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கோர கடமைப்பட்டது என்பதால், 1ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டிய இழப்பீடு தொகையை 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் முதலில் செலுத்திவிட்டு, பின்பு 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து இழப்பீடு தொகையை பெற்றுக்கொள்ளலாம் என முடிவு செய்து பிரச்சனை 2க்குரிய தீர்வு காண்கிறது.

**13) <u>பிரச்சனை 3–க்குரிய தீர்வு :</u>**

மனுதாரர் தன் மனுவில் விபத்தினால் தனக்கு வலது கை 3வது விரல் எலும்பு முறிந்து துண்டாகிவிட்டது என்றும், வலது மேல்தாடை எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், வலதுகண் புருவத்தின் கீழ் மேல் பகுதிகளில் வெட்டுக் காயங்களும், வலதுகை மற்றும் வலதுபக்கம் முழுவதும் ரத்தக்காயங்களும் ஏற்பட்டது என்று தெரிவித்து அதையே தனது சாட்சியத்திலும் தெரிவித்து, அதற்கு ஆதரவாக மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை ஆராய்ச்சி மையம் வழங்கிய காயச்சான்றிதழை மனுதாரர் ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.3 காயச்சான்றிதழை பரிசீலிக்கையில் மனுதார் தன் மனுவிலும் சாட்சியத்திலும் கூறியுள்ளதுபோல், அவருக்கு கடந்த 20.12.2021ம் தேதி மாலை 04.30 மணியளவில் நடந்ததாக சொல்லப்படும் சாலை விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்கு 21.12.2021ம் தேதி சேர்ந்து 27.12.2021ம் தேதி வரை சிகிச்சை பெற்றுள்ளார் என்பதை உறுதிபடுத்துகிறது.

**14)** மேலும், மனுதாரர் மதுரை மீனாட்சி மிஷன் ஆராய்ச்சி மையத்தில் சிகிச்சைக்கு சேர்வதற்கு முன்பாக இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு, அங்கு அவருக்கு ஸ்கேன் எடுக்கப்பட்டுள்ளது. ஸ்கேன் எடுக்கப்பட்டதற்கான ரசீது ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மதுரை மீனாட்சி மிஷன் ஆராய்ச்சி மையத்தில் சிகிச்சையில் இருந்து விடுவிக்கும்போது வழங்கிய சான்று ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.8 ஐ பரிசீலிக்கையில்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:17:11 +0530

அறுவை சிகிச்சை 3 வது விரலில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு செய்யப்பட்டுள்ளது என்பதையும், முகப்பகுதியில் ஏற்பட்ட காயத்தினால் பற்களில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. ம.சா.ஆ.9 ஐ பரிசீலிக்கையில் அவர் சிகிச்சைக்காக ரூ.2,15,707/- செலுத்தியுள்ளார் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. ம.சா.ஆ.10, ம.சா.ஆ.12 ஆகிய ஆவணங்களை பரிசீலிக்கையில் அவர் உள்நோயாளியாகவும், வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்றுள்ளார் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. ம.சா.ஆ.15, ம.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நுண்கதிர் படங்களை பரிசீலிக்கும்போது அவருக்கு விபத்து சமயத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

**15)** மனுதாரர் தனக்கு ஏற்பட்ட ஊனத்தை மெய்ப்பிப்பதற்காக இந்நீதிமன்ற உத்தரவின்படி இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவக்குழு இயங்கி வரும் ஊன நிர்ணயக்குழு முன்பாக ஆஜராகி உள்ளார் என்பதும், ஊன நிர்ணயக் குழு மனுதாரரை பரிசீலித்து அவருக்கு கைவிரலில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு ஊனம் 10% என்றும் மேல்தாடையில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு ஊனம் 5% என்றும் ஆக மொத்தம் ஊனம் 15% இருக்கும் என நிர்ணயித்துள்ளது. ம.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஊனச் சான்றிதழின்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் நிரந்தர ஊனத்தை ஏற்படுத்தக்கூடிய காயங்கள் இல்லை என்பதை இத்தீர்ப்பாயம் அறிந்துகொள்ள முடிகிறது.

**16)** மேலும், மனுதாரர் நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்தபோது விபத்து நடந்துள்ளது. மனுதாரர் மனு தாக்கல் செய்யும் போது இளநிலை உதவியாளராகவும், தன்னை சாட்சியாக விசாரிக்கப்படும்பொழுது ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறுபவராகவும் இருந்து வருகிறார். மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயத்தினால் தான் ஏற்கனவே செய்து வந்த வேலைகளை

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.10 18:17:15 +0530

செய்ய இயலவில்லை என்பதை மெய்ப்பிக்கும்விதமாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனம் அவர் செய்து வந்த தொழிலை பாதிக்கும் வகையில் இல்லை என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே, மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்திற்கு சதவீத அடிப்படையில் இழப்பீடு வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

17) **சென்னை உயர்நீதிமன்றம் Noori Vs. Narendran and New India Assurance Co., Ltd, Chennai** என்ற வழக்கில் 2020 ஆம் ஆண்டில் நடந்த விபத்துக்கு ஒரு ஊன சதவிகிதத்திற்கு ரூ.9000/- என நிர்ணயம் செய்துள்ளது என்றும், அதன் அடிப்படையில் இவ்வழக்கு விபத்து நடந்த வருடம் 2021. மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனம் 15 சதவீதம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்துள்ளதால், 1 சதவீத ஊனத்திற்கு ரூ.9000/- வீதம் 15 சதவீதம் ஊனத்திற்கு **ரூ.9000 X 15%= ரூ.1,35,000/-** இழப்பீடு கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது.

18) மனுதாரர் தரப்பில் மனுதாரர் சிகிச்சையின்போது சிகிச்சைக்காக செலவழிக்கப்பட்ட தொகைக்கு ஆதரவாக ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ.9 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ.9 ன்படி இழப்பீடாக ரூ.1,000/- மற்றும் ரூ.2,15,707/- மொத்தம் **ரூ.2,16,707/-** பெறத்தக்கவர் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

19) **அஜெய்குமார் எதிர் ராஜ்குமார்** வழக்கில் உச்ச நீதிமன்றம் வகுத்துள்ள வழிகாட்டுதல்களின்படி, மனுதாரர் வலி மற்றும் வேதனை, அதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு இழப்பீடு கோர உரிமை உண்டு. எனவே வலி மற்றும் வேதனை என்ற தலைப்பின் கீழ் ரூ.50,000/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. மேலும் போக்குவரத்துக் கட்டணங்கள், உதவியாளர் கட்டணங்கள் மற்றும் கூடுதல் ஊட்டச்சத்து போன்ற வழக்கமான தலைப்புகளின் கீழ் இழப்பீடு கோர மனுதாரருக்கு உரிமை உண்டு. எனவே

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:17:42 +0530

போக்குவரத்துக் கட்டணங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ.20,000/- தொகையும், உதவியாளர் கட்டணங்கள், கூடுதல் ஊட்டச்சத்து என்ற தலைப்புகளின் கீழ் தலா ரூ.10,000/- தொகையும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

20) மேற்கண்ட தீர்வுகளின்படி கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கக்கூடியது -

| | | |
|---|---|---|
| ஊனத்திற்கு | ரூ. | 1,35,000/- |
| மருத்துவச் செலவு | ரூ. | 2,16,707/- |
| போக்குவரத்து செலவு | ரூ. | 20,000/- |
| உதவியாளர் செலவு | ரூ. | 10,000/- |
| கூடுதல் ஊட்டச்சத்து | ரூ. | 10,000/- |
| மொத்தம்<br>முழுமையாக | ரூ.<br>ரூ. | **3,91,707/-**<br>**3,91,710/-** |

**இறுதியாக,**

1. இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

2. மனுதாரருக்கு 3 ஆம் எதிர்மனுதாரர் ஒட்டுமொத்த இழப்பீடாக **ரூ.3,91,710/-**ம், அதற்கு மனு தாக்கலான தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை வருடத்திற்கு 7.5% வட்டியுடன் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மெய்நிகர் கணக்கு (Virtual Account) எண்.ADJRMD732022 (IFSC.No. SBIN0004266)-ல் வைப்பீடு செய்ய வேண்டும் என உத்தரவிடுகிறது.

3. 3ம் எதிர்மனுதாரர் மேற்படி இழப்பீட்டுத்தொகையை முதலில் செலுத்திவிட்டு பின்னர் 1ம் எதிர்மனுதாரர் / உரிமையாளரிடமிருந்து திரும்ப பெற்றுக்கொள்ள உத்தரவிடுகிறது. (Pay and Recovery)

4. மனுதாரர் அவருக்குரிய இழப்பீட்டுத்தொகையை வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் உடனடியாக பெற்றுக்கொள்ள உத்தரவிடுகிறது.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:17:47 +0530

5. மனுதாரர் செலுத்திய நீதிமன்ற கட்டணம் போக இழப்பீடு தொகைக்குரிய மீதமுள்ள நீதிமன்றக் கட்டணத்தை இவ்வுத்தரவு தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் நீதிமன்றக் கட்டணம் முழுவதையும் செலுத்தும் தேதிவரை இழப்பீட்டு தொகைக்கு மனுதாரர் வட்டி பெறத்தக்கவர் அல்ல என்றும் உத்தரவிடுகிறது.

6. வழக்குரைஞர் ஊதியம் ரூ.20,335/- என்று நிர்ணயம் செய்யப்படுகிறது.

7. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**செலவுத் தொகைப்பட்டியல்**

| மனுதாரர் தரப்பு | | எதிர்மனுதாரர்கள் தரப்பு |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ. 3290 00 | |
| வக்காலத்து செலவு | ரூ. 10 00 | இல்லை |
| வழக்கறிஞர் கட்டணம் | ரூ. 20335 00 | |
| மொத்தம் | ரூ. 23635 00 | |

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பின்னர் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் என்னால் திறந்த இத்தீர்ப்பாயத்தில் அவையறிய பகரப்பட்டது.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:17:54 +0530

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு**
**கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :**

ம.சா.1 – இராமநாதன்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 | பார்வை மகஜர் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | காயச்சான்று | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | TN 65 AK 3943 பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | TN 65 AF 1810 பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | குற்ற இறுதி அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | மருத்துவ பில்கள் | அசல் |
| ம.சா.ஆ.8 | மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை வழங்கிய விடுவிடுப்பு சான்று | அசல் |
| ம.சா.ஆ.9 | மருத்துவ பில் | அசல் |
| ம.சா.ஆ.10 | மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் | நகல் |
| ம.சா.ஆ.11 | விடுவிப்பு அட்டை | அசல் |
| ம.சா.ஆ.12 | மனுதாரர் கேணிக்கரை லெட்சுமி மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான அட்டை | அசல் |
| ம.சா.ஆ.13 | சம்பள சான்று | அசல் |
| ம.சா.ஆ.14 | மனுதாரர் வாகனத்திற்கு செலவு செய்ததற்கான சான்று | நகல் |
| ம.சா.ஆ.15 | நுண்கதிர் படங்கள் | அசல் |
| ம.சா.ஆ.16 | ஸ்கேன் படங்கள் | அசல் |
| ம.சா.ஆ.17 | ஆதார் அடையாள அட்டை | நகல் |
| ம.சா.ஆ.18 | ஆர்த்தோ மற்றும் பல் மருத்துவரால் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ்கள் | அசல் |
| ம.சா.ஆ.19 | காப்பீடு பாலிசி | நகல் |

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**</u> :

எ.ம.சா.1 – திருமதி. யமுனா
எ.ம.சா.2 – திரு. கதிரவன்
எ.ம.சா.3 – திரு. முத்துக்குமார்

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:18:00 +0530

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>:**

எ.ம.சா.ஆ.1 – காப்பீடு பாலிசி

எ.ம.சா.ஆ.2 – 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு
Returned cover அஞ்சல் ரசீதுடன்

எ.ம.சா.ஆ.3 – சட்ட அறிவிப்பு

சா.சா.ஆ.1 – அதிகார கடிதம்
சா.சா.ஆ.2 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை
சா.சா.ஆ.3 – சோதனை அறிக்கை
சா.சா.ஆ.4 – மருத்துவ ரசீதுகள்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.10 18:18:07 +0530

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
இராமநாதபுரம்.**